தேக் தயாரிப்பு பொருள்கள்
மற்றும்
குளிர்பானத் தயாரிப்புகளைப்
பெற்றிட
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இனிப்பு, சொக்கலட்,
பிஸ்கட்
மற்றும்
பழவகைகள்
விற்பனையாளர்
கணேஷா
வர்த்தக நிலையம்,
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 08 திங்கட்கிழமை (21 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 114

### மூடப்பட்டிருக்கும்

சகல குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களும் இன்று மூடப்பட்டிருக்கும் என குடும்ப அட்டை பதிவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

### துண்டுப் பிரசுரம்

தென்மராட்சிப் பகுதிகளில் நேற்று முன்தினம் ஹெலிகொப்டரிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன.

(உ-31-117)

# மதக்குழுக்களின் சமாதான முயற்சி: அரசாங்கம் ஆதரவு வழங்கவில்லை

## பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வோதயத் தலைவர் ரி. ஆரியரத்தினாவினாலும், கிறிஸ்தவ மதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு அரசாங்க ஆதரவு வழங்கப்படவில்லை.

– இவ்வாறு ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

''ஆரியரத்னாவினாலும், கிறிஸ்தவ மதக் குழுக்களினாலும் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் தனிப்பட்ட முயற்சிகளே.

ஜனாதிபதி விஜேதுங்க, திரு. ஆரியரத்னாவின் கருத்துக்களை கேட்டறிந்தார். ஆனால் சமாதானத்திற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை'' – இவ்வாறு பிரட்மன் வீரக்கோன் மேலும் சொன்னார்.

''இங்கு இனப்பிரச்சினை இல்லை. அரசியல் பிரச்சினைகளே உள்ளன. அவற்றைத் தீர்க்க வேண்டும். தமிழுக்கு உத்தியோக மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

''பேச்சுவார்த்தைக்குத் தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறிவித்திருப்பதை அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

''ஆனால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்; ஏனைய தமிழ்க் குழுக்களை அங்கீகரிக்க வேண்டும்; தலைவர்களே பேச்சு நடத்த வேண்டும் – என்ற

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பேராசிரியர் குணரத்தினம் பதில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் க. குணரத்தினம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம்திகதி தொடக்கம் பணிபுரிவார்.

பேராசிரியர் குணரத்தினத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் 200 தமிழர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச். 21

கொழும்பு கோட்டைப் பகுதி கடந்த வியாழக்கிழமை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு 200 தமிழர் கைது செய்யப்பட்டனர் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவமும், பொலிஸாரும் இணைந்து கொழும்பு கோட்டை ரயில் நிலைய பகுதி டாம் வீதி, 4 ஆம், 5 ஆம் குறுக்குத்தெரு, செட்டித் தெரு, பிரின்ஸ் வீதி ஆகிய பகுதிகளை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியதாகவும்—

நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை வரை நடந்த தேடுதலில் இருநூறுக்கும் அதிகமான தமிழர் கைது செய்யப்பட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கடைகளில் வேலை செய்வோரும், லொட்ஜ்களில் இருந்தோருமே பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவும் அப்பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடந்ததாகவும்—

எத்தனைபேர் கைது செய்யப்பட்டனர் என்ற விவரம் தெரிய வரவில்லை என்றும் –

கொழும்பில் இருந்து வந்தவர் ஒருவர் தெரிவித்தார்.

### 21 சிங்கள மீனவர்கள் பலி!

## புத்தளம் தமிழர் 2,000 பேர் அகதிகளாகக் கொழும்புக்கு!

கொழும்பு, மார்ச். 21

புத்தளம் பகுதியிலிருந்து சுமார் இரண்டாயிரம் தமிழர்கள் உயிருக்கு அஞ்சி கொழும்புக்கு அகதிகளாக இடம்பெயர்ந்திருப்பதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

கடந்த புதனன்று புத்தளம் குதிரைமலைக்கு அப்பால் கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் சிங்கள மீனவர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே.

இதனையடுத்து சிங்கள மீனவர்களின் குடியிருப்புகளுக்கு அருகே வசிக்கும் தமிழர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த அச்சத்தின் காரணமாகவே சுமார் 2 ஆயிரம் பேர் கொழும்பை அண்டிய பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

மேற்படி கடற்பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த சிங்கள மீனவர்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்திருக்கிறது என இராணுவத் தரப்பு தெரிவித்தது.

(உ-3)

## பாதுகாப்பு நடவடிக்கைகள் கொழும்பு நகரில் தீவிரம்!

கொழும்பு, மார்ச் 21

சந்தேகத்துக்கு இடமான நபர்களின் நடமாட்டங்கள் பற்றி உடன் தகவல் தெரிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் கோரியுள்ளது.

சந்தேகத்துக்கிடமான பொதிகள் சந்தேகத்துக்குரிய நபர்களின் நடமாட்டங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

தகவல் தெரிவிப்போர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

இதேசமயம் —

ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறும், குற்றச் செயல்கள் தொடர்பான முறைப்பாடுகளை உடனடியாக விசாரித்து நடவடிக்கை எடுக்கும் படியும் பொலிஸ் மா அதிபர் பிராங்டிசில்வா நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

### முச்சந்தி முரளி



கிழக்கு பாணியிலைதான் தெற்கிலையும் தேர்தல் திருவிழா நடத்துவினம்......!

## கொழும்பு நகர பாதுகாப்பு ராணுவத்திடம் ஒப்படைப்பு?

யாழ்ப்பாணம், மார்ச். 21

கொழும்பு மற்றும் சுற்றுப் பகுதிகளை பாதுகாக்கும் பொறுப்பு கடந்த வியாழக்கிழமை முதல் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மற்றொரு கொழும்புச் செய்தி தெரிவித்தது.

இராணுவத்தினருக்கு இதற்கான அதிகாரங்களை ஜனாதிபதி வழங்கியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

தென் மாகாண தேர்தலைக் குழப்பும் வகையில் விடுதலைப் புலிகள் மற்றும் ஜே. வி. பியினரின் தாக்குதல்கள் இடம்பெறலாம் என அஞ்சப்படுவதால் இராணுவத்துக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும்—

கொழும்பு வீதிகளில் சகல வாகனங்களும் இராணுவத்தினரால் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதாகவும்—

உரிய ஆவணங்களை வாகனத்தில் செல்வோர் சமர்ப்பிக்காது விட்டால் இராணுவத்தினர் அவ்வாகனத்தையும், அதில் பயணம் செய்வோரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாணத்திலும் பாதுகாப்பு தீவிரம்

கொழும்பு, மார்ச் 21

தென்மாகாணத்தில் வரும் வியாழனன்று நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலை முன்னிட்டு அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

தென்மாகாணத்தின் முக்கிய நகரங்களில் பொலீஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கும் பலத்த பொலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ரோந்துப் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

தென்மாகாணத்துக்கு செல்லும் எவரும் தேசிய அடையாள அட்டைகளை வைத்திருக்குமாறு பொலீஸார் பணித்துள்ளனர்;

சந்தேகத்துக்கு இடமான வாகனங்களையும், நபர்களையும் கண்டுபிடிக்குமுகமாக தென் மாகாணத்தின் பல பகுதிகளில் பாதுகாப்பு சோதனை நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன.

தென் மாகாணத்துக்குள் பிரவேசிக்கும் வெளி வாகனங்கள் மற்றும் புதிய நபர்களை கண்காணிப்பதில் பொலீஸ் கொமாண்டோக்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இதேவேளை—

எதிர்க் கட்சிகளின் 10 தேர்தல் அலுவலகங்கள் கடந்த வாரம் எரிக்கப்பட்டன என்று எதிர்க் கட்சிகள் தரப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் குழப்பங்கள் ஏற்படலாம் என அனைத்துக் கட்சிகளுமே முறையிட்டிருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் அதிகாரிகளாக அமைச்சர்களின் ஆட்கள்!

கொழும்பு, மார்ச் 21

தென்மாகாணசபைத் தேர்தலில் மாத்தறை மாவட்டத்தின் பல வாக்களிப்பு நிலையங்களில் உதவித் தெரிவு அத்தாட்சி அலுவலர்களாக முக்கிய அமைச்சர்களின் அமைச்சுக்களில் பணியாற்றும் அதிகாரிகளே நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

அதுவும் ஐ. தே. க. சார்பாக தேர்தல் பணிகளை நெறிப்படுத்தும் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேன கூரே, கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா, தொழில் இராஜாங்க அமைச்சர் எல். ஆர். பியசிறி, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பி. எஸ். எல். கலப்பதி முதலிய அமைச்சர்களின் அமைச்சுகளில் பணியாற்றும் உயர் அதிகாரிகளே இப்பதவிகளுக்கு விசேடமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

இந்த நியமனங்கள் தேர்தல்கள் நியாயமாக நடைபெறுமா என்ற சந்தேகத்தை எழுப்பியிருப்பதாக நேற்றைய ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

வாக்களிப்பு நிலையங்கள் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் அதிகாரம் உதவித் தெரிவு அத்தாட்சி அலுவலர்களுக்கே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்குத் தேர்தல்களில் பொலீஸார் அத்துமீறல்

### தேர்தல் ஆணையரின் அறிக்கையில் அம்பலம்

கொழும்பு, மார்ச் 21

மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தலில் ஏறாவூர், காத்தான்குடிப் பிரதேச சபை வாக்களிப்பு நிலையங்களில் பொலீஸார் பல முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்பது அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

இது தொடர்பான விசாரணை அறிக்கையை தேர்தல் ஆணையாளர் நேற்று வெளியிட்டார்.

தமக்கு எதிரான கொலைப் பயமுறுத்தல்களுக்கு மத்தியிலும் மேற்படி முறையீடுகள் தொடர்பான விசாரணையை மட்டக்களப்பு அரச அதிபர் திரு மோனகுருசாமி நடத்தியிருந்தார் என்பது தெரிந்ததே.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு வட்டாரங்கள் எதிர்ப்பு:

## கடல்வலய தடைச்சட்ட நீக்க உத்தரவு இடைநிறுத்தம்

கொழும்பு, மார்ச் 21

மன்னார் தொடக்கம் திருகோணமலை வரையிலான கடல்வலய தடைச்சட்டத்தை நீக்கும் உத்தரவு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு வட்டாரங்கள் இணக்கம் தெரிவிக்காததாலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலன் அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சின் இந்த புதிய தீர்மானம் குறித்து சம்பந்தப்பட்ட பகுதிகளின் அரசாங்க அதிபர்கள், பிரதேசசெயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்—

கடல் வலயத் தடைச்சட்டத்தை நீக்கும் வரை மீனவருக்கான உலர் உணவு நிவா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய தலைவருக்கு தங்க வாள் விருது!

யாழ்ப்பாணம், மார்ச் 21

பூநகரி — நாகதேவன்துறை கூட்டுப்படைத் தளத்தை தவளை நடவடிக்கையின் போது நெறிப்படுத்தி வெற்றி வாகை சூடிய தமிழீழ தேசிய தலைவர் வே. பிரபாகரனுக்கு ஒட்டுசுட்டான் தெங்குப் பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் தங்கவாள் விருதும், பாமாலையும் வழங்கப்பட்டன.

கற்சிலை மடுவில் அமைந்துள்ள மேற்படி சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் வைத்து கடந்த 16 ஆம் திகதி சங்கத்தின் தலைவர் திரு. சி. மார்க்கண்டுவினால் இந்த விருது, முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவண்ணனிடம் கையளிக்கப்பட்டது.

(உ-3)

## வடக்கு-கிழக்கு ஆளுநர் விரைவில் யாழ், வருவாராம்

கொழும்பு, மார்ச் 21

''விரைவில் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை நேரில் பார்த்து நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தவும் உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுப்பேன்''

வடக்கு கிழக்கு ஆளுநர் லயனல் பெர்னாண்டோ இவ்வாறு கூறியுள்ளார்.

மட்டக்களப்பு — திருமலை மாவட்ட ஆயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளை மட்டக்களப்பில் வைத்து ஆளுநர் சந்தித்துப் பேசினார்.

அண்மையில் யாழ் சென்று திரும்பிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள் அவர்களின் துன்ப துயரங்கள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று ஆளுநரிடம் கேட்டுக் கொண்டார்.

தாம் விரைவில் யாழ் செல்ல இருப்பதாகவும்—

அதற்கான ஒழுங்குகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன என்றும் ஆளுநர் அப்போது ஆயரிடம் தெரிவித்தார்.

(உ-5-9)

## மண்டைதீவுக் கடற் பகுதியில் கடற்படையினர் தாக்குதல்

### மீனவர் இருவர் காயம்; ஒருவரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 21

கல்முனை — மண்டைதீவு கடற்பிராந்தியத்தில் இருந்து படையினர் நேற்றுப் பல தடவைகள் கிழக்கு அரியாலை கொழும்புத்துறை மற்றும் பகுதிகளை நோக்கி [illegible] நடத்தினர்.

நேற்று அதிகாலை 12 30 மணிக்கு கரையோரப் பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. நேற்று மாலை 6 30 மணி [illegible] மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

பின்னர் நேற்றிரவு 7.20 மணி முதல் சுமார் அரை மணி நேரம் கடற்படையினர் பீரங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் படையினர் சூடு! விளானில் ஒருவர் பலி!!

மாதகல் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் குறி பார்த்துச் சுட்டதில் விளானில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று நண்பகல் 12மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் விளானில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் வசித்த சுந்தரம் இரா சரத்தினம் (வயது 55) என்பவரே மரணமானார்.

விளானில் உள்ள தமது வளவில் அவர் குழை வெட்டிக் கொண்டிருந்த வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டை இடும் ஒரு சோடி வான்கோழியும், புறொயிலர் இறைச்சிக்கோழிகளும் உடன் விற்பனைக்குண்டு. ஆனந்தன், இல 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி - நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (29993)

நீளமான கட்டுத் தடிகள் (50) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு இல: 22, வெங்கடேசன் வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (சி-7591)

## பேட்டுக் குஞ்சு விற்பனை

கைலைன் பிறவுண் (Hy-Line Brown) இரண்டு கிழமை வளர்ச்சியடைந்த பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29966)

## சேவல்க் குஞ்சு விற்பனை

கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி", சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29965)

## மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற 31 வயது, பூரட்டாதி 29 வயது சதயம் தொழில் புரிபவர்களுக்கு நற்குணமும், அழகும் உடைய மணப்பெண்களைத் தேடுகின்றனர். சுவிஸில் வசிப்பவரும் விரும்பத்தக்கது. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். C/o, 27, உதயன், சேவை நிலையம். 82, கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். (7032)

## மணமக்கள் தேவை

சகல மதத்தவர்களுக்கும் பொறியியலாளர், எக்கவுண்டன், வெளிநாடு போன்ற மணமக்கள் இருக்கிறார்கள். எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். படிப்பித்து எடுக்கக்கூடிய மணமகனும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, "வளர்மதி இல்லம்" கே. கே. எஸ். றோட், மல்லாகம். (7031)

## மணமகன் தேவை

சுதேசாலிக்க மதத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஆயுர்வேத வைத்திய பெண்ணுக்கு அரச கூட்டுத் தாபன, வங்கி ஊழியர் அல்லது வெளிநாட்டில் வேலை புரியும் நல்ல படித்த 35 - 48 வயது மணமகன் தேவை. இல: 623, மே/பா, உதயன். (29994)

## தேவை

ஆசிரியை ஒருவரும் அவரது தாயாரும் வசிப்பதற்கு சிறிய அல்லது பகுதி வீடு நல்லூர், ஆனைப்பந்தி, பெருமாள் கோயிலடி சுற்றாடலில் குறைந்தது ஆறு மாதங்களுக்கு தேவை. தகுந்த ஒத்துழைப்பு வழங்கப்படும் எழுதவும். இல. 621, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (29986)

3 K V. டைனமோ 1500 R. P. M. அல்லது 10 K. V. டைனமோ 3000 R. P. M, 1500 R P. M. தேவை. எம்மிடம் 7½ K. V. 3 பேஸ் டைனமோ உண்டு. மாற்றி எடுப்பதாகிலும் மாற்றம் செய்யலாம். தொடர்: நிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-7458)

ஆங்கில அறிவுள்ள நற்பண்பும், நேர்மையுடைய, அரசாங்க உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்ற நல்ல கையெழுத்துடைய ஆண் எழுது வினைஞர் தனியார் கல்வி நிறுவனத்திற்கு உடன் தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். இல: 624, C/o உதயன், யாழ்ப்பாணம். (சி-7592)

## பயிற்சி வினாத்தாள்கள்

தவணைப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களிற்காக ஆண்டு 3முதல் O/L வரை அனைத்து பாடங்களிற்குமான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம். (29995)

## வகுப்புகள்

தமிழ்மொழியும் இலக்கியமும், சமஸ்கிருதம், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடங்கள் 1994 O/L மாணவர்களுக்கு நடத்தப்படும் தொடர்பு: இல; 188, கண்டிவீதி. (அன்னக்கிளி ஹோட்டல் அருகில்) யாழ்ப்பாணம். (29992)

## மாதிரி வினாத்தாள்கள்

A/L தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல், விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்கள் 50% கழிவுடன் வழங்கப்படுகின்றன. தொடர்பு: நியூ சவன்ஸ் கோல், கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (சி-7593)

## தவறிவிட்டது

கைசெயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். G. V. Kanesalinkam, இல. 298, K. K. S Road Jaffna. (29943)

சோ. ரூபவதனி (727851631V), க. மகேந்திரன் (641730220V) ஆகிய அடையாள அட்டைகளும், வட மாகாணத்துக்குள் செல்லும் அனுமதி அட்டையும் 12 - 3 - 1994இல் மீசாலைக்கும் கொண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கிராமிய வங்கி முகாமையாளரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-7590)

## தப்பியோடிய சிப்பாய் கொள்ளை முயற்சி

கெக்கிராவை என்னுமிடத்தில் வீடு ஒன்றில் இருந்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக 3 சந்தேக நபர்களை பொலீஸார் கைது செய்துள்ளனர் என்றும்- அவர்களில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிப்பாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையிடப்பட்ட பணத்தின் ஒரு பகுதியை அவர்களிடமிருந்து பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

---

ஏப்ரல் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள

## மக்கள் வங்கி - எழுதுவினைஞர்

போட்டிப் பரீட்சைக்கான

## விசேட துரித பயிற்சி வகுப்புகள்

- தொடர்ந்து 10 தினங்கள்
- நாளாந்தம் 3 மணித்தியாலங்கள். பிற்பகல் 3 – 6

**ஆரம்பம்:- 23-03-94 பிற்பகல் 3 மணி**

- ★ இலவச பாடக்குறிப்புகள்
- ★ நாளாந்தக் கட்டணம் ரூபா 25/- மட்டுமே

**ஸ் ன் கல்வி நிலையம்**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கருகில்)

(சி/7456)

---

# வேலை வாய்ப்பு

## கணக்காய்வு உத்தியோகத்தர் (ஆண்)

தமிழீழ அரசியற்துறைக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

1. க. பொ. த (உயர்தர) பரீட்சையில் கணக்கியல் உட்பட ஆகக்குறைந்தது மூன்று வர்த்தகப் பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
2. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (Diploma in Accountancy) சான்றிதழ் அல்லது சீ ஐ எம் ஏ (CIMA) பகுதி 1-3 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
(1 இலும் 2 இலும் குறிப்பிடப்பட்டவர்கள் பிரபல தனியார்/அரச நிறுவனங்களில் 3 வருட அனுபவம் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும்)
3. அரசாங்க/தனியார் சேவையில் இருந்து இளைப்பாறியவர்கள் ஆகக்குறைந்தது பத்து வருடங்கள் கணக்காய்வு வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் உள்ளவர்கள் 25-03-1994 ஆம் திகதிக்கு முன்னர் 'தமிழீழ அரசியற்துறை, தமிழீழ விடுதலைப் புலிகள், கச்சேரி கிழக்கு, சுண்டிக்குளி, தமிழீழம்.' என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்கள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கணக்காய்வு உத்தியோகத்தர்' என்று எழுதப்படல் வேண்டும்.

அரசியற்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

(சி/7587)

---

கோண்டாவில் கிழக்கு

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம்

## 4-ம் நாள் - மஞ்சத் திருவிழா

இன்று 21 – 03 – 1994 திங்கட்கிழமை

- நாதஸ்வரக் கச்சேரி: முற்பகல் 10-00 — பிற்பகல் 1-00
- நாதஸ்வரக் கச்சேரி: பிற்பகல் 6-00 — பிற்பகல் 9-00
என். கே. பத்மநாதன் குழுவினர்
கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்

பிற்பகல் 9-00 சமயச் சொற்பொழிவு
திரு. ஆறு திருமுருகன் B. A

பிற்பகல் 10-00 இன்னிசை விருந்து
S G சாந்தன் குழுவினர்

ஒளி அமைப்பு: மனோகலைஞ், கோப்பாய்

— 4ஆம் திருவிழா உபயகாரர்கள்.

பரிபாலன சபை. [29997]

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: 10 — 02 — 1966



அநியாய அழிப்பால்: 21 — 03 — 1986

**செல்வி சேனாதிராசா பிரேமதரா**

ஆண்டு எட்டு ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் உன் நினைவு வாட்டுதம்மா!
விழி பெருகும் நீரும் வற்றாதம்மா
உன் நினைவு அழியாது; அழியாதம்மா!

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்:

பெற்றோர், அத்தான்,
அக்கா, மகன்மார்,
அம்மம்மா, உறவினர்கள்

50/25,
வைரவர் கோயில் லேன்,
கொட்டடி. (29956)

---

# தேநீர் பிரியர்களிற்கு ஓர் நற்செய்தி!

## ☆ புதிய யுகத்தின் ஆரோக்கிய பானம்!

## ☆ தனித்துவமான புதுச்சுவை!

## "லிவர் பிறதேர்ஸ்" அமைப்பின் மற்றுமோர்

புதிய அதி உன்னத படைப்பு

# ★ லிப்டன் - சிலோன்டா

# ★ லிப்டன் - லாவோஜி

- மிகுதியான உழைப்புத் தேவைப்படும் இக்காலத்தில் ஏற்படும் அதிகமான களைப்பினைப் போக்கி உற்சாகம் ஊட்டி புத்துணர்வை அளிக்கிறது.
- இங்கிலாந்தின் அனுமதியுடனும் அனுசரணையுடனும் பல்லாண்டுகளாகத் தரமான உற்பத்திகளை வழங்கி வரும் லிவர் நிபுணர்களினால் விசேடமாகத் தேர்ந்து கலவை செய்யப்பட்டது.
- அன்றே கொய்த அருஞ்சுவைத் தேயிலையின் அதே நறுமணமும் நறுஞ்சுவையும் குன்றாத வகையில் விசேடமாக அடைக்கப்பட்ட 400g, 200g, 100g, 50g, 11g, பக்கட்டுக்களில் கிடைக்கிறது

சமூகத்தின் நட்புறவில் தேநீருக்கு என்றொரு வைபவம்
அவ்வேளை லிப்டன் - சிலோன்டா
லிப்டன் - லாவோஜி

விநியோகஸ்தர்கள்:
சிறீ விக்கினேஸ்வரா களஞ்சியம்
இல. 150, கண்டி வீதி,
சாவகச்சேரி. (29985)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தூய்மையான தேர்தல்சாத்தியமா?

இம் மாதம் முதலாம் திகதி கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலின் பொலிஸார் தமது கடமையைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டனர் என்று விசாரணைகள் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

ஏறாவூர், காத்தான்குடி பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களில் குண்டர் குழுக்கள் உட்புகுந்து கள்ள வாக்குகளைப் போட்ட போது. பொலிஸார் அவர்களைத் தடுக்க முயற்சிக்காது பார்த்துக் கொண்டிருந்தனர் என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அத்தோடு ஆயுதந் தரித்த குண்டர் குழுக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று அட்டகாசமும், கள்ளத்தனமும் புரிந்த சம்பவங்கள் பலவற்றுக்குப் பின்னணியில் பொலிஸ் அதிகாரிகள் சிலர் செயற்பட்டிருக்கின்றனர். இதவும் விசாரணை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஏறாவூர், காத்தான்குடி வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் கிழக்கில் நடைபெற்ற கடல் போன்ற தேர்தல் முறைகேடுகள், வன்முறைகள், டலாத்காரங்களில் ஒரு துளியே எனலாம்.

வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்ற போது வாக்களிப்பு முடிந்து விட்டதாக காலை 9மணிக்கே அவர்களைத் திருப்பி அனுப்பிய பொலிஸார் —

வாக்களிப்பு நிலையத்திற்கு வந்திருந்த வாக்காளர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவர்களைப் பயமுறுத்தி அனுப்பிய பொலிஸார் —

வாக்காளர்களை அவ்வாறு திருப்பி அனுப்பிவிட்டு வாக்குப் பெட்டிகளைத் தாமே நிரப்பிய பொலிஸார் —

வாக்களிப்புக்கு நிலையங்களுக்குள் அத்துமீறி புகுந்த குண்டர்கள் தேர்தல் அதிகாரிகளை, கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொண்டு சுவரைப் பார்த்தவாறு நிற்கச் சொல்லிவிட்டு, கள்ள வாக்குகளைப் போட்டதை கண்டும் காணாதவர்களாக இருந்த பொலிஸார் — என்று எத்தனை எத்தனையோ சம்பவங்கள் கிழக்குத் தேர்தலில் நடந்திருக்கின்றன!

இவை குறித்தும் தேர்தல் ஆணையாளர் விசாரணை நடத்துவாரானால் கிழக்கில் நடைபெற்றது ஜனநாயகத்தைப் பேணும் தூய்மையான தேர்தலா அல்லது போசடிகள் நிறைந்த பலாத்காரத் தேர்தலா என்பது வெளிச்சத்துக்கு வரும்!

பாவம்! தேர்தல் ஆணையாளர் என்ன செய்வது? அவர் சுயேச்சையான, நிறைந்த அதிகாரங்கள் கொண்ட அதிகாரி தான். என்றாலும் கிழக்கு இயல்பு நிலையில் உள்ளது; அது அரசின் — படைகளின் — கட்டுப்பாட்டில் உள்ளது; தேர்தல் நடத்தக்கூடிய சுமுகமான சூழ்நிலையில் கிழக்கு மக்கள் பிரச்சினை எதுவுமே இன்றி வாழ்கிறார்கள் என்று வெளி உலகத்துக்குக் காட்டுவதற்காக தேர்தலை நடத்திய அரசு பெரிய அளவிலான விசாரணைக்கு எப்படி அனுமதிக்கும்?

பேரும் ஆரம்பத்தில் குறிப்பிட்ட ஏறாவூர் — காத்தான்குடி சம்பவங்கள் சம்பந்தமான விசாரணையில் கடமையிலிருந்து தவறிய பொலிஸார் தண்டிக்கப்படுவர் என்பதற்கு என்ன உத்தரவாதம்? அதிகாரத்தில் உள்ளவர்கள் சொன்னதைத் தானே அவர்கள் செய்தார்கள்! அதனால் நிச்சயமாக அவர்களுக்குப் பதவி உயர்வுகள் தான் வழங்கப்படும்!

நிலைமை இப்படியிருக்க, இலங்கையில் இப்போதும் சரி, எப்போதும் சரி தூய்மையான, சுதந்திரமான தேர்தல் நடைபெறும் என்று எவராவது கனவு தானும் காணமுடியாது! இதுவுமானவரை அது சாத்தியம் என்று சந்திராவந்த டி. சில்வா கூறுவது சுத்த அசட்டுத்தனமாகும்!

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது மிக ஆபத்தானது

## அஷ்ரப் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, மார்ச் 21

"வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு நியாயமான நிரந்தரத்தீர்வு கிட்டாதா என முழு உலகும் அங்கலாய்த்துக் கொண்டிருக்கையில் வடக்கு-கிழக்கு இணைப்பின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த முயற்சிப்பது ஆபத்தானதும் விசமத்தனமானதுமாகும்"

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிக்க கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் உத்தேசத்தை கைவிடுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அந்தக் கடிதம் மூலம் ஜனாதிபதி விஜேதுங்காவை கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு எழுதியுள்ள அந்தக் கடிதத்தில் அஷ்ரப் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்டிருந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை இன்னமும் வெளிவரவில்லை. இதேவேளை — வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினை இல்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் பிரதமரோ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்தத் தயார் என்று கூறி வருகிறார். சபாநாயகரோ யாழ்ப்பாணம் சென்று புலிகள் இயக்கத்துடன் பேச்சு நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். மதத்தலைவர்கள் அடிக்கடி யாழ். சென்று விடுதலைப் புலிகளை சந்தித்து வருகிறார்கள் என்று உள்ளது. (த 5)

## ஐ. தே. கவில் அனுரா குழப்படி செய்ய முடியாது!

### சு. கட்சி எம். பி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டு செய்த குழப்படியை ஐக்கிய தேசியக் கட்சியிலும் அனுரா பண்டாரநாயக்கா செய்வாரானால் அங்கு அவரது முதுகெலும்பு தப்புமா என்பது சந்தேகம்தான்.

சுதந்திரக் கட்சி எம். பி ஆனந்த தஸநாயக்கா காலியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையின் முன் கண்டவாறு தெரிவித்தார்.

அனுரா சுதந்திரக்கட்சியில் இருந்து வெளியேறியது கட்சிக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் தான். பல்வேறு தொழில்களுக்கு ஆட்களை நியமிப்பது போன்று தான் இன்று அமைச்சர் பதவிகளும் வழங்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார். (த-எ)

## கொட்டாவவில் கொள்ளை; ஐவர் குழு கைவரிசை!

ஆயுதம் தரித்த ஐந்து பேர் கொண்ட கோஷ்டி ஒன்று கொட்டாவ பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் துப்பாக்கி முனையில் ஒரு லட்சம் ரூபாவுக்கு அதிகமான பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரில் வந்திறங்கிய அக்கோஷ்டி வாளை நோக்கிச் சுட்ட பின்னர் இக்கொள்ளையை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளைக்கு பயன்படுத்தப்பட்ட கார் சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தொலைவில் மக்கும்புற என்னுமிடத்தில் அனாதரவாகக் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

மத்தேகொட என்னுமிடத்தில் உள்ள ஒருவரிடமிருந்து இக்கார் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

### சட்டத்தரணியைத் தாக்கிய இளைஞன்

## பிரிகேடியருக்கு எதிராக பொலீஸ் விசாரணை!

கொழும்பு, மார்ச் 21

தோமஸ்— தோமியன் கிரிக்கெட் போட்டியின் போது சட்டத்தரணி ஒருவரைத் தாக்கிய இளைஞனின் தந்தையான இராணுவ பிரிகேடியரை இவ்வாரம் கறுவாக்காட்டுப் பொலீஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக, தம்மை தமது கடமையைச் செய்ய விடாது சம்பந்தப்பட்ட பிரிகேடியர் தடுத்ததாக சம்பவம் நடந்த இடத்தில் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸ் பிரதம இன்ஸ்பெக்டர் ஒருவரும் உயர் பொலீஸ் அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட பிரிகேடியர் கொழும்பில் பாதுகாப்பு அமைச்சில் பணிபுரிகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-எ)

### இவ்வருடம்

## 4,400 மாணவருக்கு மகாபொல புலமைப் பரிசில்

கொழும்பு மார்ச் 21

மகாபொல உயர் கல்விப் புலமைப் பரிசில் இம்முறை 4 ஆயிரத்து 400 மாணவருக்கு வழங்கப்படவிருப்பதாக வர்த்தக வாணிபத் துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 3 ஆயிரத்து 800மாணவர்களுக்கு மட்டுமே இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. இத்தொகையை அதிகரிக்க வேண்டும் என வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் தெரிவித்த ஆலோசனைக்கு இணங்கவே இத்தொகை அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும்—

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாணவருக்கும் மாதாந்தம் 950 ரூபா வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

1992 — 93 கல்வி ஆண்டுக்கான மகாபொல உயர்கல்வி புலமைப் பரிசுக்கு தெரிவான சகல மாணவர்களுக்கும் அவர்களது தெரிவு குறித்து கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## அனுராதபுர பஸ் சாரதிகளை அடையாளம் காண சீருடை

கொழும்பு, மார்ச் 21

அனுராதபுரம் மாவட்டத்தில் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகளும் நடத்துநர்களும் சோதனையின் போது படையினரால் இலகுவாக அடையாளம் காணப்படுவதற்காக சீருடைகள் அணிந்து இருக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவை அசட்டை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று [illegible] டுள்ளது. [illegible]

### பாடசாலைகளில்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று திங்கள் பிற்பகல் 2-30 மணிக்கு அதிபர் திரு. அ. சவ்வரநாதன் தலைமையில் நடைபெறும். (த)

★ ★ ★

சண்டுவேலி அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகள் இன்று திங்கள் பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு செ. சேகிவராசா தலைமையில் நடைபெறும். (த-152)

★ ★ ★

யாழ். பாஷையூர் சென் அன்ரனிஸ் மகளிர் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் சங்-சகோதரி கொஸ்ரா தலைமையில் நடைபெறும். (த-51)

### சுடப்பட்டார்

கொழும்பு, மார்ச் 21

திருமலை மணற்சேனை என்னுமிடத்தில் தமிழ் அமைப்பு ஒன்றின் உறுப்பினர் எனக் கருதப்படும் சோமசுந்தரம் தேவநாதன் என்பவர் கடந்த செவ்வாயன்று இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர். (த-5)

### கிணற்றில் கண்டெடுத்த சிசுவின் சடலம்

அழுகிச் சிதைந்த நிலையில் இனந்தெரியாத ஒரு நாள் நிரம்பிய சிசுவின் சடலம் 'ஷொப்பிங்' பையில் போடப்பட்ட நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சுன்னாகம் பகுதி கிணறு ஒன்றில் இருந்து இந்த சடலம் கண்டு பிடிக்கப்பட்டது.

பிறந்தவுடன் சிசு ஷொப்பிங் பை ஒன்றினில் போடப்பட்டு கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (இ-15-87)

### மலையக முன்னணித் தலைவர்

## சந்திரசேகரன் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, மார்ச் 21

மலையக மக்கள் முன்னணி தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவருமான திரு. பெ சந்திரசேகரன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

15 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 5 லட்சம் ரூபா வீதம் இரு சரீரப் பிணையிலும் செல்ல அவருக்கு பாணந்துறை மேல் நீதிமன்ற நீதிவான் டி. பி. வீரசூரிய கடந்த வெள்ளியன்று அனுமதி வழங்கினார்.

சந்திரசேகரனின் சகோதரி ஒருவருக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதால் அவரது திருமணத்துக்கு பிரதான பாதுகாவலராக சந்திரசேகரனே இருக்க வேண்டியுள்ளதாக அவரது சட்டத்தரணி கேட்டுக் கொண்டார். அதனைத் தொடர்ந்தே திரு. சந்திரசேகரன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின் சூத்திரதாரி எனக் கூறப்படும் வரதனுக்கு தலவாக்கலையில் புகலிடம் கொடுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட சந்திரசேகரன் கடந்த 1991ஆம் ஆண்டு [illegible]

### இறம்பைக் குளம் ம. வி. மைதானம்;

## விமானப் படையினரிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

வவுனியா, மார்ச் 21

வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தின் பாவனைக்கு விடப்பட்டிருந்த விளையாட்டு மைதான நிலப்பரப்பை தம்மிடம் மீண்டும் ஒப்படைக்கும்படி விமானப் படையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா பாதுகாப்பு படை அதிகாரிகள் இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலய அதிபர் அருட்செல்வி எம். எம். மடுத்தினுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பாதுகாப்பு' அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனிகசூரியவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

### கடந்த வருடம்

## கனடாவில் அகதி அந்தஸ்து பெற்றோர் தொகை குறைவு

ஒட்டாவா மார்ச் 21

கடந்த வருடம் கனடா அரசாங்கம் 14 ஆயிரத்து 101 பேருக்கு மட்டுமே அகதிகள் அந்தஸ்து வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1992இல் 17ஆயிரத்து 487 பேருக்கும், 1991 இல் 19ஆயிரத்து 425 பேருக்கும் கனடா அரசு புகலிடம் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சட்ட விரோதமாக கனடாவுக்குள் வரும் அகதிகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று கடந்த பெப்ரவரியில் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தே அகதிகளின் அனுமதி குறைந்துள்ளது.

கடந்த வருடம் இலங்கையில் இருந்தே அதிகமான அகதிகள் கனடாவுக்குள் பிரவேசித்துள்ளனர்.

இலங்கையில் இருந்து 3,725 பேரும், சோமாலியாவில் இருந்து 2 220 பேரும், ஈரானில் இருந்து 800 பேரும் கனடாவில் தஞ்சமடைந்தனர். (த-17)

## புலிகளின் தாக்குதல்களால் மன்னாரில் பதற்றம்!

மன்னார் பகுதியில் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து மேற்கொண்ட தாக்குதல்களை அடுத்து—

தலைமன்னாருக்கும், மன்னாருக்கும் இடையிலான பல சிறு பொலீஸ் காவல் நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளன.

முக்கிய இடங்களில் உள்ள காவல் நிலைகள் பலப்படுத்தப்பட்டு சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கையாக மன்னார் கச்சேரியை சுற்றி முட்கம்பிவேலி அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு மக்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும், பிற்பகலில் கடைகள் பூட்டப்பட்டு நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (த-9)

### அகதிகளை மீள அனுப்புதல்;

## சுவிஸ் அதிகாரிகள் குழு வவுனியாவுக்கு விஜயம்

வவுனியா, மார்ச் 21

சுவிட்ஸர்லாந்திலிருந்து இலங்கை அகதிகளை திருப்பி அனுப்பும் சாதக,பாதக நிலைமைகளை ஆராய்வதற்காக சுவிஸ் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்தது.

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் லூஷியன் [illegible] பால், சுவிஸ் நாட்டிலுள்ள அகதிகளுக்கு உதவும் அமைப்பின் தலைமை அதிகாரி ஜேன்வாரிஷ் அங்கத்துவ அதிகாரி மட்டின்பார்மன் ஆகியோர் இக் குழுவில் அடங்கியிருந்தனர்.

வவுனியா அரச அதிபர் உட்பட முக்கிய சிவில் நிர்வாக அதிகாரிகளையும்,பாதுகாப்புத்துறை அதிகாரிகளையும் அவர்கள் சந்தித்தும் [illegible] பேசினர். இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய அகதிகள் தங்கியுள்ள ஆசிக்குளம் அகதிகள் முகாமையும் அவர்கள் பார்வையிட்டனர்.

வவுனியாவில் நிலவும் வாழ்க்கை நிலைமை, அரசியல் சூழ்நிலை ஆகியவற்றை கண்டறிந்து சுவிட்ஸர்லாந்திலுள்ள இலங்கை அகதிகளை தாயகம் அனுப்பும் சாத்தியம் குறித்து ஆராய்வதே இக் குழுவின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (த 9)

## மூடன் யார்? அறிவாளி யார்? நல்லைக்குருமணி விளக்கம்

நல்லைக் குருமணி, ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகளின் குருபூஜை இன்றாகும். இதனை ஒட்டி நல்லைக் குருமணி அருளிய அமுதவாக்குகள் சில இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன

திரிகரண சுத்தியோடு இறை வழிபாடு செய். அகச்சுத்தம், புறச்சுத்தம் முக்கியம். மனச்சிதறல் இருக்கக் கூடாது. நிச்சயம் நீ பயன் பெறுவாய்.

மனம், வாக்கு, காயத்தை ஒருமைப்படுத்த கூட்டுப் பிரார்த்தனை மிக நல்லது. அது சத்சங்கம், நல்லார் இணக்கம் மேன்மை தரும், நல்வழி காட்டும் —

தூற்றுவார் தூற்றட்டும். உன்னைப் போற்றுவார் போற்றட்டும். பொருட்படுத்தாதே — உன் கடமைகளைச் சரிவரச் செய்து, அவற்றின் பலாபலன்களை எல்லாம் பகவானுக்கே அர்ப்பணஞ் செய்து விடு. இது கவைதயின் சாரம்.

எதற்கும் மனம் தான் காரணம். மனதைக் கட்டுப்படுத்துவது சுலபம் அல்ல. அதற்கு ஒப்பான வேகம் இல்லை. பழக்கத்தில் கொண்டு வர எல்லாம் சரி வரும். மன உறுதி. நம்பிக்கை தளரா விடாமுயற்சிவெற்றி தருவன.

தான் நினைக்கிறது, சொல்கிறதுதான் சரி என்று கொள்பவன் மூடன். அவற்றில் சரியுமிருக்கும், பிழையும் இருக்கும் என்பவன் அறிவாளி. அதிகம் பேசித் தன்னைப் புகழ்பவனும் மூடன்; தனக்கு எல்லாம் தெரியும் என்று நினைப்பவனும் பெரும் மூடன்.

வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. விடாமுயற்சி திருவினையாக்கும் என்று மூன்னும் சொன்னேன்.

ஏழை விரும்பாதே ஆடம்பர வாழ்க்கை வேண்டாம். நடுநிலையில் இருந்தால் எப்பொழுதும் சமாளிக்கலாம் பணம் சம்பாதிப்பதில் பேராசையை வளர்க்கக் கூடாது.

யாம் எல்லோரும் ஆண்டவனின் குழந்தைகள். இதில் பேதம் ஏது! எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும்.

சி. த. நடராஜன்

கிழக்குத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எட்டு பக்கங்கள் கொண்ட இந்த விசாரணை அறிக்கையில் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்தடி சில்வா தெரிவித்துள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ பொலிஸ் அதிகாரிகள் வாக்களிப்பு நிலையங்களுள் புகுந்து தேர்தல் அதிகாரிகளை மிரட்டி வாக்குச் சீட்டுகளை வாக்குப் பெட்டிக்குள் திரப்பியுள்ளனர்;

★ 18 வாக்களிப்பு நிலையங்களில் ஆகக் குறைந்தது 400க்கும் அதிகமான வாக்குச் சீட்டுகள் இவ்வாறு ஆயுதக் குழுக்களினால் திணிக்கப்பட்டுள்ளன.

★ தமது இலக்கத்தகளை அணியாத பொலிஸாரும். பொலிஸாரின் சீருடைகளை ஒத்த உடைகளை அணிந்த ஆயுதக் குழுவினருமே இவ்வாறு வாக்களிப்பு நிலையங்களுக்குள் அத்துமீறிப் புகுந்துள்ளனர்.

★ உதவி பொலிஸ் அத்தியட்சகர் (ஏ. எஸ். பி.) என அடையாளம் காணப்பட்ட நபர் ஒருவர், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயம் மற்றும் ஏறாவூர் விபுலானந்த வித்தியாலயம் ஆகியவற்றில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று அங்கு பணியாற்றிய அதிகாரிகளிடம், எந்தவித முறைகேடுகளும் இடம் பெறவில்லை என பலாத்காரமாக வாக்கு மூலங்கள் பெற்றுள்ளார்.

★ வாக்காளர்களையும், தேர்தல் அதிகாரிகளையும் பாதுகாப்பதற்கு சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்பட்டுக்கும் பொலிஸார், தான்தோன்றித்தனமாக நடந்துள்ளனர்; தங்கள் கடமைகளை உதாசீனம் செய்துள்ளனர்; வாக்களிப்பு நிலையங்களுள் அத்துமீறிப் புகுந்த குண்டர் குழுக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

★ தேர்தல் ஆணையாளர் திணைக்களத்தினால் இந்த முறைகேடுகள் குறித்து நடத்தப்பட்ட விசாரணையின் பணிகளைக் குழப்புவதற்கும் உண்மைகளை மறைப்பதற்கும் சில பொலிஸ் அதிகாரிகள் முயற்சித்துள்ளனர்.

பொலிஸ் உயர் அதிகாரிகளின் அழுத்தம் காரணமாகவே இத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டதாக சந்தேகம் எழுகிறது.

★ மேற்படி 13 வாக்களிப்பு நிலையங்களில் நிகழ்ந்த சம்பவங்கள் ஜனாதிபதித் தேர்தலிலோ, பொதுத் தேர்தலிலோ, மாகாணசபைத் தேர்தலிலோ நடைபெற்றிருப்பின் அவைகளை இரத்துச் செய்வதற்கு சட்டத்தில் இடமுண்டு ஆனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டங்களில் இத்தகைய சம்பவங்களுக்கு அத்தகைய 'ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அப்படிச் செய்யப்பட்டிருப்பின் மேற்படி தேர்தலை இரத்துச் செய்வதே எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கையாக இருந்திருக்கும் — இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிக்கையை பொலீஸ் மா அதிபருக்கு அனுப்பியுள்ள தேர்தல் ஆணையாளர் —

உரிய விசாரணைகளை நடத்தி, குற்றமிழைத்த பொலீஸ் அதிகாரிகளுக்கு எதிராக தேர்தல் விதிகளை மீறியமைக்காக தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யும்படி கோரியுள்ளார். (உ-6)

கடல் வலய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணம் தொடர்ந்து வழங்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

கடல்வலயத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து மீனவர்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்தும்படி அமைச்சு அரச அதிபர்களுக்கு சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறது. (த-9)

மதகுழுக்களின...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று நிபந்தனைகளையும் ஏற்றுக் கொண்டால் மட்டுமே பேச்சுவார்த்தைகளுக்கு அரசு சம்மதிக்கும்" — இவ்வாறு பிரட்மன் வீரக்கோன் மேலும் தெரிவித்ததாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன. (உ-8-9)

வீட்டினில் பயிர்கள் தழைத்தாலே போதும்
வாட்டமே இன்றி வாழ்வது போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம்

## கீர்த்தனை இயற்றும் போட்டி

1. கவிஞர்களிடமிருந்து பின்வரும் விடயங்களில் கீர்த்தனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
   (1) சுவிசேட பிரபல்யம்
   (2) பாவ அறிக்கை
   (3) தூய ஆவி
   (4) திருச்சபை
2. ஒருவர் எத்தனை கீர்த்தனைகளையும் அனுப்பலாம். ஒவ்வொன்றும் தனித்தனித் தாளில் எழுதப்பட வேண்டும்.
3. கீர்த்தனைகள், இயக்குனர் சங்கீத சபை, தென்னிந்திய சபை காரியாலயம், வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு 31-05-1994 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

கீர்த்தனை சொந்தப் படைப்பாகவும் முன்னர் பிரசுரிக்கப்படாததாகவும் இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| முதற் பரிசு | ரூபா 2,500-00 |
| இரண்டாம் பரிசு | ரூபா 1,500-00 |
| மூன்றாம் பரிசு | ரூபா 1,000-00 |

இயக்குனர்,
சங்கீத சபை,
தெ. இ. யா. ஆதீனம்,
வட்டுக்கோட்டை.

[இ-7577]


## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 20 — 05 — 1955
உதிர்வு: 15 — 03 — 1989

### அமரர் முத்து மனோகரன்


(புலோலி தெற்கு, கூவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை ஊழியரும்)

ஆண்டைந்து ஆனதையா - உன்
அன்பு முகம் காணாமல்
மீண்டொருகால் வந்திங்கே - உன்
மனந்திறந்து பேசாயோ?

உங்கள் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா,
சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்.

[7150]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன

### தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா

லெப்டினன்ட் சிறைவாசன் (சிறை)

அன்னையின் மடியில்: 24-11-1967
தாயக மண்ணில்: 21-03-1989

சிறை என்ற நாமத்தை
உனதாக்கிக் கொண்ட
சீராளனே வீர வேங்கையே!
மறவா!
இறவாத உன்புகழ்
இம்மண்ணுக் குண்டு
எப்போதும் உன்நாமம்
எம்முள்ளம் சொல்லும்.

உன் நினைவோடு வாழும்:
பெற்றோர், சகோதரர்.

உதய தாரகை,
மல்லாகம். 16-03-1994.

(7034)

## விவசாயத்துறை பீடாதிபதி

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் விவசாயத்துறை பீடாதிபதியாக பேராசிரியர் அ. நவரத்தினராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி விவசாய பீடத்தில் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தலைமையில் நடந்த பீடாதிபதி தேர்தலில் பேராசிரியர் நவரத்தினராசாவுக்கு 9 வாக்குகளும், கலாநிதி க. மோகனதாஸுக்கு 8 வாக்குகளும் கிடைத்தன.

பேராசிரியர் நவரத்தினராசா மூன்று ஆண்டுகளுக்கு பீடாதிபதியாகப் பணிபுரிவார். (அ)

## இன்று

யாழ். இந்து மைதானச் சந்தியில் அமைந்துள்ள மெய்கண்ட தேவர் ஆதீனத்தினர் ஏற்பாடு செய்துள்ள கணநாத நாயனார் மற்றும் நல்லைக் குருமணி அடியோரின் குருபூசை நினைவு தினவிழா இன்று காலை 9மணிக்கு மேற்படி ஆதீனத்திலும் —

பிற்பகல் 3மணிக்கு கலைப் புலவர் வீதி திருவாசக மன்றத்திலும் நடைபெறும். (த)

தென்மாகாணத்தி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பதைத் தொடர்ந்து குழப்பங்கள் ஏற்படாதவாறு பாதுகாப்பை பலப்படுத்துமாறு பொலிஸார் பணிக்கப்பட்டிருப்பதாக அரசு சார்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் இன்று நள்ளிரவுடன் நிறுத்தப்படும்.

பொ. கைலாசபதியின்
## சிந்தனைகள்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் உப அதிபராகப் பணியாற்றிய காலஞ்சென்ற பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நூல் வடிவாக்கிச் சில பிரதிகளை வெளிக்கொணர்ந்துள்ளது.

கைலாசபதி அவர்கள் அவ்வப்போது மொழி, சமயம் பற்றி கூறிவந்த சிந்தனைகளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் 32 அப்பியாசக்கொப்பிகளில் தமது கைப்பெழுத்திலேயே எழுதி வைத்திருந்தார்.

கைலாசபதியவர்களின் சிந்தனைகளை அழிந்து போக விடாது போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக் கல்விமான்கள் பலர் எமக்குச் செய்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்நூற் பிரதிகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன கைலாசபதியின் சிந்தனைகளை, பல்கலை கழகத்தின் சார்பில் பேராசிரியர் சு. சுசீந்திரராசாவும், திரு ஆ. சபாரத்தினமும் பதிப்பித்துள்ளனர்.

இந்நூற் பிரதிகள் விற்பனைக்கென வெளியிடப்படவில்லை. ஆனால் அவை பல்கலைக்கழக நூல் நிலையத்தில் மட்டும் இருக்கும். கைலாசபதியின் சிந்தனைகளில் ஆர்வம் உள்ளவர்கள் ஆய்வாளர்கள், சாதனையாளர்கள் நூல் நிலையத் தலைவருடன் தொடர்பு கொண்டு தக்கவாறு நூலைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பண்டிதமணியின் சிந்தனைகளுக்கும் ஆய்வுக்கும் ஊற்றாக ஊன்றுகோலாக விளங்கியவர் பொ. கைலாசபதி ஆவர். கைலாசபதி அவர்களைச் சிந்தனைச் செல்வர், தத்துவ விசாரத்தில் மூழ்கியவர், தெய்வப் பிறவி, மனிதத் தெய்வம், மகாத்மா, மகான், நெற்றிக்கண்ணர், புண்ணிய ஆத்மா, முனி என்றெல்லாம் பண்டிதமணி தமது எழுத்துக்களில் ஆங்காங்கு போற்றி எழுதியுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது; சிந்தனைக்குரியது.

பேராசிரியர்
அ. துரைராசா
துணைவேந்தர்
யாழ். பல்கலைக்கழகம்

# சீமெந்து ஊழியருக்கு தொடர்ந்து சம்பளம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு தொடர்ந்து சம்பளம் வழங்க சீமெந்து கூட்டுத்தாபன முகாமையாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சென்றிருந்த காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் பிரதிநிதிகள் அவருடன் நடத்திய பேச்சின் போதே இதற்கான இணக்கம் காணப்பட்டிருக்கிறது.

பெப்ரவரி மாதச் சம்பளத்தை இவ்வாரம் இறுதியிலும் —

புதுவருடத்தை யொட்டி மார்ச் மாதச் சம்பளத்தை அடுத்தமாதம் 6 ஆம் திகதிக்கு முன்பும் —

வழங்குவதற்கு முகாமையாளர் ஏற்பாடு செய்துள்ளதாக யூனியன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்,

சீமெந்து தொழிற்சாலை மூடும் திட்டம் குறித்து முகாமையாளர் எதுவும் கூறவில்லை என்றும் —

தொடர்ந்து சம்பளம் வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் — யூனியன் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-3)

# பல்கலைக்கழக ஊழியருக்கு கொழும்பிலிருந்து சைக்கிள்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், பணியாளர்களுக்கென மொத்தம் 530 சைக்கிள்கள் இவ்வாரத்தில் கொழும்பிலிருந்து வந்து சேரவுள்ளன.

இன்று கொழும்பிலிருந்து புறப்படும் "வாதுவ" கப்பலில் சைக்கிள்கள் ஏற்றப்பட்டு விட்டதாகவும் இரண்டொரு தினங்களில் அவை வந்து சேரும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச் சைக்கிள்கள் பல்கலைக் கழக ஊழியர் சங்க உறுப்பினர்களுக்கும் ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்குமே வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

சைக்கிள்களை இங்கு கொண்டுவருவதற்கான ஒழுங்குகளை கொழும்பு சென்றிருந்த பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு ச. க. தனேந்திரன் செய்திருந்தார். (அ)

கிராமவாசிகளை விரட்ட

# தமது பதுங்கு குழிகளுக்கு படையினரே தீயிட்டனர்!

## வில்பத்து விசாரணையில் அம்பலம்

வில்பத்து சரணாலயத்தில் உள்ள கட்டுக்கெலியாவ இராணுவ முகாமில் நடந்த சம்பவம் பற்றிய விசாரணையின்போது—

காட்டில் களவாக மரம் வெட்டுபவர்களுக்கு உதவுவதற்காகவே, முகாமில் இருந்த பதுங்கு குழிகளுக்கு முகாமின் கோப்ரல் பிரேமசிறியும் ஏனைய சிப்பாய்களும் நெருப்பு வைத்தனர் என்ற விடயம் அம்பலத்துக்கு வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளே நெருப்பு வைத்தனர் என்று கூறி அங்கிருந்த கிராமவாசிகளை விரட்டி விட்டால், களவாக மரம் வெட்டுவதை குழப்பமின்றி செய்யலாம் என்பதே அவர்களின் திட்டமாக இருந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

இராணுவ உளவுப்பிரிவு சார்ஜன்ட் என். பி. நுகவெல விசாரணையை நடத்தினார்.

விசாரணையின்போது சம்பந்தப்பட்ட கோப்ரல் பிரேமசிறி தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இன்னொரு சிப்பாய் சந்தகுமார வீரக்கூன் காலில் காயங்களுடன் அனுராதபுரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மேல் விசாரணை தொடருகிறது. (உ-எ)

# பூநகரி படை முகாம் சிறிதாக்கப்பட்டது!

நிலைமைகளைச் சமாளிக்கக் கூடிய அளவுக்கு பூநகரியில் இராணுவ முகாம் சிறிதாக்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் செமுனு குலதுங்க தெரிவித்தார்

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், பூநகரியில் இராணுவ முகாம் இன்னும் உள்ளதா? என்று செய்தியாளர் ஒருவர் கேட்டதற்கு —

'ஆம்' என்று கூறி விட்டு முன்கண்டவாறு பிரிகேடியர் குலதுங்கா பதிலளித்தார்.

கேள்வி: பூநகரியில் கடற்படைத்தளம் இன்னும் உள்ளதா?

பிரிகேடியர்: இல்லை தற்போது யாழ் நீரேரியில் கடற்படையினரே கிடையாது.

பேராசிரியர்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லையே யாழ். பல்கலைக்கழக துணைவேந்தராக நியமிக்குமாறு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பேரவை சிபார்சு செய்துள்ளது அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைத்ததும் அவர் துணைவேந்தராக நியமிக்கப்படுவார் அதுவரை பதில் துணைவேந்தராகப் பணிபுரியுமாறு மானிய ஆணைக்குழு அவரைப் பணித்துள்ளது. (அ)

மண்டைதீவு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
இத் தாக்குதல்களை நடத்தினர்

கல்முனை - மண்ணித்தலை பக்கமாக கடற் பிராந்தியத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் படகுகளை நோக்கியே இத்தாக்குதல் நடத்தப்பட்டது இத்தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர். படகு ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

குருநகரைச் சேர்ந்த இம்மானுவேல் சகாயராசா (வயது 30) சின்னவன் ரமேஷ் (வயது 18) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

ரமேஷ் என்ற மற்றொரு இளைஞர் தலையில் ஏற்பட்ட காயத்துடன் கடலில் வீழ்ந்தார். இவர் நேற்று நள்ளிரவு வரை கரையேறவில்லை. அவருக்கு என்ன நடந்தது எனத் தெரியவரவில்லை.

படுகாயமுற்ற மற்றைய இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-15-17)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். பிரதேச செயலர் பிரிவு கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவை ஒட்டி நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை பாஷையூர் சென். அன்ரனீஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:—

★ 3 மணி:- லைக்கிங்ஸ் வி. க எதிர் சென். நோக்ஸ் வி க.

★ 4 மணி: - குருநகர் தொடர்மாடி வி. க. எதிர் றிறீன்கிங்ஸ் வி க.

கொழும்பு...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
யும் முகாமுக்கு கொண்டு செல்வதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு நகரில் பொலிஸார் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் தற்சமயம் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும்—

கொழும்பு நகர் முழுவதும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பொலிஸாரின் நடமாடும் சேவையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (உ-8)

இப்பத்திரிகை திரு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) ... வீதி, 202/8 இலக் ... 21-03-1994 இல் அச்சிட்டு வெளி...


இணுவில்
சிவகாமி அம்மன் தேவஸ்தானம்
## திருமஞ்சத் திருப்பணி

அம்பிகை அடியார்களே!

அருள்மிகு இணுவை சிவகாமி அம்பாளுக்கென 14-09-92 அன்று அச்சேற்றப்பெற்ற இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான திருமஞ்சத் திருப்பணி வேலைகள், தொடர்ந்து நடைபெற சிவகாமி அம்பாளின் பேரருள் கிடைத்துள்ளது என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே நன்கொடைகள் செலுத்த விரும்புபவர்கள் திருமஞ்சத் திருப்பணிச்சபையிடம் பணத்தைச் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்
திருமஞ்சத் திருப்பணிச்சபை

சிவகாமி அம்பாள் தேவஸ்தானம்
சிவகாமபுரம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

(29937)



உ
நல்லை ஞானசம்பந்தர் ஆதீன
குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
## குருபூஜை நாள்

சிறப்பு நிகழ்ச்சிகள்

நாள்: 21 — 03 — 1994
(ஸ்ரீமுக பங்குனி 8, திங்கட்கிழமை)
நேரம்: பிற்பகல் 3 மணி
இடம்: ஆதீன கலாமண்டபம்
தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தமிழ்த்துறைத் தலைவர், யாழ். பல்கலைக்கழகம்)
இறைவணக்கம்:
துர்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்
வரவேற்புரை: கவிஞர் சோ. பத்மநாதன்
மங்கள இசை
நாதஸ்வரம்: என். கே. பத்மநாதன்
R. கேதீஸ்வரன்
தவில்: ரி. உதயசங்கர்
க. சிவகுமார்
ஆராதனை உரை:
சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
திரு. சி. வேலாயுதம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
வைப்பு நிதியத்தினரால் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டாம்கட்ட நிதியான ரூபா ஒருலட்சம் பெறுமதியான காசோலையை
வைத்தியகலாநிதி
திருமதி ஸ்ரீ. கனகசபை அவர்கள்
நல்லை ஆதீன முதல்வரிடம் கையளிப்பார்.
விசேட நிகழ்ச்சி
வேணுகானம்: நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தி
வயலின்: இசைஞான திலகம் உ. இராதாகிருஷ்ணன்
மிருதங்கம்: இசைக்கலைமணி க. கண்ணதாஸன்
தவில்: வித்துவான் க. சிவகுமார்
கடம்: வித்துவான் சதா. வேல்மாறன்
முகர்சிங்: வித்துவான் எஸ். ராஜா
நன்றியுரை:
விசேட ஒலி, ஒளி: மனோ லைற், கோப்பாய்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
நல்லை ஆதீன பராமரிப்பு நிதியம்

நல்லூர்
18-3-94

(வி/7594)


## மரண அறிவித்தல்

### இராமநாதர் சிதம்பரப்பிள்ளை

(ஓய்வு பெற்ற பிஸ்கால் மணியம்)

காரைநகர் கருங்காலி, இராமநாதர் சிதம்பரப்பிள்ளை காலமானார்.

இவர் காலம் சென்ற இராமநாதர், வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும் தவசோதி, பாக்கியசோதி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கந்தையா, சுந்தரேஸ்வரன், சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சங்கரநாதன், திருமதி ச. மனோன்மணி திருச்செல்வம், பஞ்சலிங்கம் (மாவீரன் லெப்டினன்ட் பேபி) விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற கமலச்செல்வி, வரதசுதன், தவலோசனா, கோகிலராஜ், கிருஸ்ணராஜ், கயத்திரி, அச்சுதன் ஆகியோரின் பேரனும் கீர்த்திகாவின் பூட்டனும் ஆவார்;

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 21-3-94 திங்கட்கிழமை 124, நாவலர் வீதி இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்;

தகவல்:
பொ. சிவபாலன்
(மருமகன்)

நாவலர் வீதி,

(29999)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org